


**01. 10. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. தமிழகத்தில் ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜை இன்று பக்தி சிரத்தையுடனும், கோலாகலமாகவும் கொண்டாடப்படுகிறது.

2. நவராத்திரி விழாவில் வெற்றியும், செழிப்பும் தழைத்தோங்க பிரதமர் திரு.நரேந்திரமோடி வாழ்த்தியுள்ளார்.

3. பாதுகாப்பு துறையில் ஆராய்ச்சி மேம்பாடு சார்ந்த தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

4. நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 98ஆவது பிறந்த நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் உள்ள அவரது சிலைக்கு இன்று மரியாதை செலுத்தினார்.

5. போர்ச்சுகல் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் - ஸ்பெய்னின் **Roberto-** வை இன்று எதிர்கொள்கிறார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***********

<u>ஆயுதபூஜை</u>

நவராத்திரி பண்டிகையின் 9ஆம் நாளான இன்று தமிழகத்தில் ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜை பக்தி சிரத்தையுடனும், கோலாகலமாகவும் கொண்டாடப்படுகிறது.

தொழிலுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இயந்திரங்கள், உபகரணங்கள், வாகனங்களை தூய்மை செய்து மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

வீடுகள், வணிக நிறுவனங்கள், கடைகள் வண்ணக் கோலமிட்டு, மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு பொரி, கடலை, சுண்டல் படைத்து சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

குழந்தைகளின் கல்வி சிறக்க பாட புத்தகங்கள், எழுது பொருட்களை வைத்து கலைவாணி சரஸ்வதியை வணங்கி வருகின்றனர்.

வெற்றி திருநாளாம் விஜயதசமி நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி திருவாரூர் மாவட்டம் கூத்தனூரில் உள்ள பிரசித்தி பெற்ற சரஸ்வதி அம்மன் கோவிலில் பால வித்தியாரம்பம் நிகழ்ச்சி நாளை நடைபெறுகிறது.

முன்னதாக தேவி பாத தரிசனம் இன்று விமரிசையாக நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்டம் குலசேகர பட்டிணம் அருள்மிகு முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழாவை ஒட்டி நாளை நள்ளிரவு மஹிசாசுர சம்ஹாரம் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் லாரி மற்றும் இருசக்கர வாகன பணிமனைகள், கோழிபண்ணை அலுவலகங்கள், விசைத்தறி கூடங்கள் ஆகியவற்றில் தொழிலாளர்கள் ஆயுதபூஜையை உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர்.

***********

<u>வாழ்த்து</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி வெளியிட்ட வாழ்த்து செய்தியில் அனைவரின் வாழ்விலும் வெற்றி மற்றும் செழிப்பை இந்நாள் வழங்கட்டும் என வாழ்த்தியுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில் அனைவரின் வாழ்விலும் கல்வி, தொழில் முன்னேற்றம் பெருக வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே புதுதில்லியில் இன்று நடைபெற்ற **RSS** இயக்க நூற்றாண்டு விழாவில் பங்கேற்ற பிரதமர் இதன் செயல்பாடுகளை எடுத்துரைக்கும் வகையிலான நினைவு தபால் தலை மற்றும் நாணயத்தை வெளியிட்டார்.

***********

<u>சரக்கு சேவை வரி</u>

சரக்கு சேவை வரி சீர்திருத்தங்களால் கல்வித்துறையில் முன்னெடுப்புகளை மேற்கொள்ள ஏதுவாக குறிப்பேடுகள், வரைபட புத்தகங்கள், எழுதுபொருட்கள் உள்ளிட்டவைகளுக்கான **GST** முந்தைய 12 சதவிகிதத்திலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சலுகையின் மூலம் மாணவர்களுக்கான நிதி செலவினம் பெருமளவு குறைவதோடு எழுதுபொருட்களின் சில்லரை விற்பனை அதிகரிக்கும்.

இதுகுறித்து திருச்சியை சேர்ந்த எழுது பொருள் விற்பனையாளர் தெரிவிக்கையில்

வாய்ஸ்

***********

.. மியூசிக் ..

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு, ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், உலக நாடுகளுடனான நட்புறவை வலுப்படுத்தி சர்வதேச அளவில் நம் குரலை முன்னெடுத்து செல்லும் மோடி அரசின் சாதனை குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் சர்வதேச நாடுகளுடனான நம் நட்புறவு வரலாறு காணாத அளவு உச்சம் அடைந்துள்ளது.

வளரும் நாடுகளுக்கான குரலை நம் நாடு முன்னெடுத்து செல்ல இந்த நட்புறவு வகை செய்ததோடு, ஜி-20 தலைமைத்துவத்தின்போது ஆப்பிரிக்க யூனியனை உறுப்பு நாடாக இணைக்கவும் வழிகோலியது.

கோவிட் 19 பெருந்தொற்று காலத்தில் நம் நாட்டின் கோவிட் தடுப்பூசி திட்டம் உலக அளவில் கொண்டு செல்லப்பட்டது குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடி உரையாற்றுகையில்

.. பிரதமர் வாய்ஸ் ..

இந்தியாவின் பன்முக நட்புறவில் தேச நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதோடு பிரிக்ஸ், குவாட், ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளுடனான ஒருங்கிணைப்பால் பாதுகாப்பு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு தீவிரவாதத்திற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகள் குறித்த நம் தேசத்தின் செயல்பாடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

பிரதமரின் வெளிநாட்டு பயணங்கள் இந்தியாவை உலக அளவில் முன்னோடி நாடாக நிலைநிறுத்தியதோடு பிற நாடுகளுடனான ஒத்துழைப்பால் சர்வதேச பிரச்சனைகளில் பிரதமர் திரு.நரேந்திரமோடியின் கருத்துக்கள் இன்றியமையா பங்கு வகிக்கின்றது.

சர்வதேச விவகாரங்களில் பிரதமரின் அளப்பரிய பங்களிப்பு குறித்து பிரபல திரைப்பட நகைச்சுவை கலைஞரும், கிரிக்கெட் வர்ணனையாளருமான பாஸ்கி, தெரிவிக்கையில்

----வாய்ஸ்----

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் தலைமையில் இந்தியா உலகளாவிய பங்களிப்பு நாடாக மட்டுமல்லாமல் பன்முக தன்மையின் தலைமைத்துவ நாடாகவும் உருவெடுத்துள்ளது.

.. மியூசிக் ..

***********

ராஜ்நாத்சிங்

பாதுகாப்பு துறையில் ஆராய்ச்சி மேம்பாடு சார்ந்த தொழில்நுட்பங்களை ஊக்குவிக்க புதுமையான சுற்று சூழல் அமைப்பை உருவாக்குவதன் அவசியம் குறித்து மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பாதுகாப்பு கணக்கு துறை தின நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், ஆராய்ச்சி மேம்பாட்டை எளிதாக்குவதில் இத்துறையினரின் பங்கு இன்றியமையாதது என்றார்.

படைவீரர்களுக்கான ஓய்வூதியங்கள், நல திட்டங்கள் பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் சூழிலில் தயார்நிலை உள்ளிட்ட பணிகளின் போது இத்துறையின் சேவைகளை அமைச்சர் பாராட்டினார்.

***********

<u>ரிசர்வ் வங்கி</u>

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம் மாற்றம் ஏதுமின்றி 5.5 சதவிகிதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

மும்பையில் நடப்பு நிதியாண்டின் 4ஆவது இருமாத கொள்கையை வெளியிட்டு பேசிய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா, நாட்டின் பணவீக்க விகிதம் 2.6 சதவிகிதமாக இருக்கும் என்றார்.

இது முந்தைய மதிப்பை விட குறைவு எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

***********

<u>முதலமைச்சர் - சிவாஜி கணேசன்</u>

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 98ஆவது பிறந்த நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை அடையாறில் அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கு இன்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

ராஜா அண்ணாமலைபுரத்தில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய தொல்காப்பிய பூங்காவை முதலமைச்சர் பார்வையிட்டார்.

இப்பூங்கா பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவர அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இதனிடையே முதலமைச்சர் ராமநாதபுரம் மாவட்டத்தில் நாளை பல்வேறு முடிவுற்ற திட்ட பணிகளை தொடங்கிவைத்து நல திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.

நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் ட்ரோன்கள் பறக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

***********

<u>தண்ணீர் திறப்பு</u>

தேனி மாவட்டம் 18ஆம் கால்வாய் பி.டி.ஆர் தந்தை பெரியார் கால்வாய்களுக்கு இன்று தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

18ஆம் கால்வாய்க்கு வினாடிக்கு 98 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

38 நாட்களுக்கு திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் தேனி உத்தமபாளையம் வட்டங்களில் உள்ள 4 ஆயிரத்து 614 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் கால்வாய்களுக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

120 நாட்களுக்கு திறக்கப்படும் இத்தண்ணீரின் மூலம் கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள 5 ஆயிரத்து 146 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

***********

<u>முதியோர் தினம்</u>

சர்வதேச முதியோர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

“கண்ணியத்துடன் முதுமை” என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

மூத்த குடிமக்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.

***********

<u>இருவரி</u>

சிவகங்கை மாவட்டத்தில் நாளை நடைபெற இருந்த கிராம சபை கூட்டங்கள் நிர்வாக காரணங்களால் வரும் 11ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்குறள் முற்றோதலுக்கு மாணாக்கர் அடுத்த மாதம் 30ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

தர்மபுரி மாவட்டத்தில் தமிழ்வளர்ச்சித்துறை சார்பில் அதியமான் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் வரும் 11, 12ஆம் வகுப்பு மாணாக்கருக்கு கவிதை கட்டுரை பேச்சு போட்டிகள் வரும் 14ஆம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் தெரிவித்துள்ளார்.

கல்லூரி மாணாக்கருக்கான போட்டிகள் அரசு கலை கல்லூரியில், வரும் 15ஆம் தேதி நடைபெறும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் தொழில்நுட்ப கண்காட்சி மற்றும் விற்பனை விழா நாளை நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தானிய விதைப்பு, மீன்கரைசல், மூலிகை செடிகள் உள்ளிட்டவை குறித்து காட்சிபடுத்தப்படுகின்றன.

நாகை மாவட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மூலம் 39 சட்ட தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட உள்ளதாகவும் தகுதியுடையோர் மாவட்ட நீதிமன்ற இணையதளத்தில் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து வரும் 15ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் உடல் ஆரோக்கியத்தை வலியுறுத்தும் மினி மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

400க்கும் மேற்பட்ட கல்லூரி மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

***********

<u>டென்னிஸ்</u>

போர்ச்சுகல் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் சுமித் நாகல் - ஸ்பெய்னின் **Roberto-** வை இன்று எதிர்கொள்கிறார்.

***********